# QB365 Question Bank Software Study Material

## புவியியல் - தொழிலகங்கள் முக்கியமான 2 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 8ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 53

**2 மதிப்பெண் வினாக்கள்**

14 x 2 = 28

1) தொழிற்சாலை - வரையறு.

**பதில் :** மூலப்பொருட்களை இயந்திரங்களின் மூலம் பயன்படுத்தக் கூடிய பொருட்களாக மாற்றப்படும் இடமே தொழிற்சாலை எனப்படும்.

2) பொருளாதார நடவடிக்கை என்றால் என்ன?

**பதில் :** உற்பத்தி, விநியோகம், நுகர்வு அல்லது பணிகளில் ஈடுபடும் எந்த ஒரு செயலுமே பொருளாதார நடவடிக்கையாகும்.

3) முக்கிய பொருளாதார நடவடிக்கைகளின் பெயர்களை எழுதுக.

**பதில் :** முக்கிய பொருளாதார நடவடிக்கைகள்,
1. முதன்மை நிலை பொருளாதார நடவடிக்கைகள் (எடுத்துக்காட்டு : கச்சா பருத்தி உற்பத்தி)
2. இரண்டாம் நிலை பொருளாதார நடவடிக்கைகள் (எடுத்துக்காட்டு: நூற்பாலைகள்)
3. மூன்றாம் நிலை பொருளாதார நடவடிக்கைகள் (எடுத்துக்காட்டு: வர்த்தகம், போக்குவரத்து)
4. சார்பு நிலை பொருளாதார நடவடிக்கைகள்
(எடுத்துக்காட்டு: வங்கித்துறை)
5. நான்காம் நிலை பொருளாதார நடவடிக்கைகள்
(எடுத்துக்காட்டு: நீதித்துறை)

4) ஐந்தாம் நிலை பொருளாதார நடவடிக்கைகள் என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் தெளிவாக்குக.

**பதில் :** 1. ஐந்தாம் நிலை பொருளாதார செயல்பாடுகள் என்பது தொழிற்சாலைகள், வணிகம், கல்வி மற்றும் அரசாங்கங்களின் உயர்மட்ட அளவில் முடிவெடுக்கும் நிர்வாகிகளை குறிப்பிடுகின்றன.
2. சுகாதாரம், பல்கலைக்கழகங்கள், அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் போன்ற துறைகளில் உள்ள உயர்மட்ட அதிகாரிகள் அல்லது நிர்வாகிகள் இவற்றில் அடங்குவர்.
3. உதாரணமாக நம்முடைய பெற்றோர்கள் வீட்டு குடிசார் பண்டம் அல்லது பொருட்கள் வாங்குவதற்கான முடிவினை அவர்களே எடுக்கின்றனர்.

5) தொழிலக அமைவிடத்திற்கு காரணமான காரணிகளைக் குறிப்பிடுக.

**பதில் :** **தொழிலக அமைவிட காரணிகள் :** மூலப்பொருட்கள், நிலம், நீர், தொழிலாளர்கள், மூலதனம், ஆற்றல்வளம், போக்குவரத்து மற்றும் சந்தை இவைகள் தொழிலகங்களின் அமைவிடத்தை தீர்மானிக்கும் முக்கிய காரணிகளாகும்.

6) பின்வருவனவற்றிக்கு சிறு குறிப்பு தருக.
அ) பெரிய அளவிலான தொழிலகங்கள்
ஆ) சிறிய அளவிலான தொழிலகங்கள்

**பதில் :** **அ) பெரிய அளவிலான தொழிலகங்கள் :**
ரூபாய் ஒரு கோடிக்கும் மேல் மூலதனம் கொண்டு நிறுவப்படும் தொழிற்சாலைகள் பெரிய அளவிலான தொழிற்சாலைகள் என்று அழைக்கப்படுகிறது. இரும்பு மற்றும் எஃகு ஆலை, எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, சிமெண்ட் தொழிற்சாலை மற்றும் நெசவாலை தொழிலகங்கள் போன்றவை பெரிய அளவிலான தொழிலகங்களுக்கு சிறந்த உதாரணமாகும்.
**ஆ) சிறிய அளவிலான தொழிலகங்கள் :**
ரூபாய் ஒரு கோடிக்கும் குறைவான மூலதனத்தைக் கொண்டு நிறுவப்படும் தொழிற்சாலைகளை சிறிய அளவிலான தொழிலகங்கள் என்று அழைக்கப்படுகிறது. எடுத்துக்காட்டு பட்டு நெசவு மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் சார்ந்த தொழிலகங்கள் இவ்வகையைச் சார்ந்தவை
ஆகும்.

7) இரண்டாம் நிலை பொருளாதார நடவடிக்கைகள் என்றால் என்ன ?

**பதில் :** (i) இரண்டாம் நிலை பொருளாதார நடவடிக்கைகள் என்பது மூலப்பொருட்களை முறைப்படுத்துதல் மற்றும் உற்பத்தி மூலம் பயன்படும் பொருட்களாக மாற்றம் செய்வது ஆகும்.
(ii) மேலாண்மை நடவடிக்கைகளைப் போன்றே எந்த ஒரு இரண்டாம் நிலை பொருளாதார செயல்பாடும் உள்ளீடு, முறைப்படுத்துதல் மற்றும் வெளியீடு (முடிவற்ற பொருட்கள்) என்ற முறையில் நடைபெறுகிறது.
(iii) எடுத்துக்காட்டாக அடுமனைகளில் மாவுகளை ரொட்டியாக மாற்றுவது ஆகும்.

8) சேவைத்துறை பற்றி குறிப்பு வரைக.

**பதில் :** (i) மூன்றாம் நிலை பொருளாதார நடவடிக்கைகள் சேவைத்துறை என்றும் அழைக்கப்படுகிறது. இது தொழிலகங்கள் இயங்குவதற்கு உதவி புரிகின்றது.
(ii) இத்துறை இந்தியாவின் மிகப்பெரிய துறைகளில் ஒன்றாகும். தற்போது இந்த துறையானது இந்திய பொருளாதாரத்தின் முதுகெலும்பாக உள்ளது.
(iii) இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 53 சதவீதம் பங்களிப்பினை அளிக்கிறது.

9) ஆற்றல் வளம் என்றால் என்ன?

**பதில் :** (i) பெரும்பாலான தொழிலகங்களை இயக்குவதற்கு தேவையான வளத்தினை ஆற்றல் வளம் என்கிறோம்.
(ii) எரிசக்தி என்பது அடிப்படை மற்றும் அவசியமான ஆற்றல் வளமாகும்.
(iii) நிலக்கரி, தாது எண்ணெய் மற்றும் நீர் போன்ற மரபுசார் மூலங்களிலிருந்து பெரும்பாலும் எரிசக்தி உற்பத்தி செய்யப்படுகிறது.
(iv) எனவே தொழிற்சாலைகளின் மின் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு மேற்கண்ட ஏதேனும் ஒரு வளம் அமைந்துள்ள இடங்களுக்கு அருகாமையில் தொழிற்சாலைகள் அமைக்கப்படுகின்றன.

10) பொருளாதார நடவடிக்கைள் என்றால் என்ன? அவற்றின் வகைகளைக் கூறுக.

**பதில் :** **பொருளாதார நடவடிக்கை:**
உற்பத்தி, விநியோகம், நுகர்வு அல்லது சேவைகளில் ஈடுபடும் எந்த ஒரு செயலும் பொருளாதார நடவடிக்கையாகும்.
**வகைகள்:**
(i) முதன்மை பொருளாதார செயல்பாடுகள்
(ii) இரண்டாம் நிலை பொருளாதார செயல்பாடுகள்
(iii) சார்புத்துறை அல்லது மூன்றாம் நிலை பொருளாதார செயல்பாடுகள்.
(iv) நான்காம் நிலை பொருளாதார நடவடிக்கைகள். (எடுத்துக்காட்டு: வங்கித்துறை)
(v) ஐந்தாம் நிலை பொருளாதார நடவடிக்கைகள். (எடுத்துக்காட்டு: நீதித்துறை)

11) சேவைத்துறை குறிப்பு எழுதுக.

**பதில் :** சேவைத்துறை இந்தியாவின் மிகப்பெரிய துறைகளில் ஒன்றாகும். தற்போது இந்தத் துறையானது இந்திய பொருளாதாரத்தின் முதுகெலும்பாக உள்ளது. இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 53 சதவீதம் பங்களிப்பினை அளிக்கிறது.

12) புவியியல் அல்லா காரணிகளை குறிப்பிடுக.

**பதில் :** புவியியல் அல்லா காரணிகள் மூலதனம், கடன்வசதி, அரசாங்கக் கொள்கைகள் / விதிமுறைகள்.

13) இந்தியாவில் உள்ள சென்னை மாநகரம் இந்தியாவின் டெட்ராய்ட் என்று அழைக்கப்படுகிறது. ஏன்?

**பதில் :** 1. இந்தியாவில் உள்ள சென்னை மாநகரம் இந்தியாவின் டெட்ராய்ட் என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில் உலகப்புகழ்பெற்ற வாகன தொழிலகங்களான ஜி.எம்., போர்டு, மஹேந்திரா, ஹுண்டாய் போன்ற தொழிலகங்கள் இங்கு அமைந்துள்ளன.
2, இவற்றைத் தவிர இந்நகரம் வாகன தொழில் ஏற்றுமதியில் 60% பங்கினைக் கொண்டுள்ளது.

14) குடிசைத் தொழில்கள் குறிப்பு எழுது.

**பதில் :** 1. குடிசைத் தொழில்கள் அல்லது வீட்டு உபயோகப் பொருள் உற்பத்தி தொழில்களை சிறிய அளவிலான தொழிலகங்கள் என்பர்.
2. இங்கு உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் கைவினை கலைஞர்களின், குடும்ப உறுப்பினர்களின் உதவியோடு தயாரிக்கப்படுகின்றன.
3. எடுத்துக்காட்டாக கூடை முடைதல், பானை தயாரித்தல், கைவினைப் பொருட்கள் தயாரிப்பு போன்றவை ஆகும்.

## 5 மதிப்பெண் வினாக்கள் 

5 x 5 = 25

15) மூலப்பொருட்களின் அடிப்படையில் தொழிலகங்களை வகைப்படுத்தி விளக்குக.

**பதில் :** மூலப் பொருட்களின் அடிப்படையில் தொழிலகங்களை நான்கு வகையாகப் பிரிக்கலாம். அவை,

**மூலப்பொருட்களின் அடிப்படையில் தொழிலகங்கள் :**

**i. வேளாண் சார்ந்த தொழிலகங்கள் :** இவ்வகை தொழிலகங்களுக்கு வேளாண் மற்றும் விலங்கு சார்ந்த பொருட்கள் மூலப்பொருட்களாகப் பயன்படுகின்றன. எடுத்துக்காட்டாக உணவுப் பதப்படுத்துதல், தாவர எண்ணெய் உற்பத்தி, பருத்தி நெசவாலைகள், பால் உற்பத்திப் பொருட்கள் போன்றவை.

**ii. கனிமவளம் சார்ந்த தொழிற்சாலைகள் :** இவ்வகை தொழிலகங்கள் கனிமத் தாதுக்களை மூலப்பொருட்களாக பயன்படுத்துகின்றன. இரும்பு தாதுவில் இருந்து உற்பத்தி செய்யப்படும் இரும்பு கனிம வளம் சார்ந்த தொழிலகத்திற்கு எடுத்துக்காட்டாகும். சிமெண்ட் தொழிற்சாலை, இயந்திரக் கருவி உற்பத்தி போன்றவை கனிமங்கள் சார்ந்த தொழிற்சாலைகளுக்கு மற்ற எடுத்துக்காட்டுகளாகும்.

**iii. கடல்வளம் சார்ந்த தொழிலகங்கள் :** இவ்வகை தொழிலகங்களுக்கு கடல் மற்றும் பெருங்கடலில் இருந்து கிடைக்கப்பெறும் பொருட்கள் மூலப்பொருட்களாகப் பயன்படுகின்றன.

**எடுத்துக்காட்டு :** பதப்படுத்தப்பட்ட கடல்சார் உணவு, மீன் எண்ணெய் உற்பத்தி அலகுகள் ஆகும்.

**iv. வனவளம் சார்ந்த தொழிலகங்கள் :** இவ்வகை தொழிலகங்களுக்கு வனப்பொருட்கள் மூலப்பொருட்களாகப் பயன்படுகின்றன. எடுத்துக்காட்டாக மரக்கூழ் மற்றும் காகித உற்பத்தி, மரத்தளவாடங்கள் மற்றும் சில மருந்து உற்பத்தி தொழிலகங்களாகும்.

16) தொழில் அமைவிடத்தை நிர்ணயிக்கும் புவியியல் காரணிகளை விளக்குக.

**பதில் :** தொழில் அமைவிடத்தை நிர்ணயிக்கும் புவியியல் காரணிகள்,

**1. மூலப்பொருட்கள்:**

i. இரும்பு மற்றும் எஃகு மற்றும் சர்க்கரை தொழிலகங்கள் முறையே இரும்புத்தாது மற்றும் கரும்பு கிடைக்கும் இடத்திற்கு அருகிலேயே அமைந்துள்ளன. சேலம் இரும்பு எஃகு ஆலையானது இரும்பு தாது கிடைக்கும் கஞ்சமலைக்கு அருகிலேயே அமைந்துள்ளது.

ii. சர்க்கரைத் தொழிற்சாலைகள் கரும்பு விளையும் இடங்களுக்கு அருகிலேயே அமைந்துள்ளன.

**2. ஆற்றல் வளம்:**

i. எரிசக்தி பெரும்பாலான தொழிலகங்களை இயக்குவதற்கு அடிப்படை மற்றும் அவசியமானதாகும்.

ii. நிலக்கரி, தாது எண்ணெய் மற்றும் நீர் போன்ற மரபுசார் மூலங்களிலிருந்து எரிசக்தி பெரும்பாலும் உற்பத்தி செய்யப்படுகிறது.

**3. மனித சக்தி:**

தொழிலாளர் சார்ந்த தொழில்களுக்கு மலிவான மற்றும் திறமையான தொழிலாளர்கள் அவசியமாகும்.

**4. போக்குவரத்து:**

i. மூலப்பொருட்களை தொழிலகங்களுக்கு கொண்டு செல்வதற்கும் முடிக்கப்பட்ட பொருட்களை சந்தைக்கு அனுப்பவும் போக்குவரத்து தேவைப்படுகிறது.

ii. எளிதான போக்குவரத்து தொழிலகங்களின் அமைவிடத்தை தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

**5. சேமிப்பு மற்றும் கிடங்கு :**

உற்பத்தியின் முடிவில் முடிவுற்ற பொருள்கள் சந்தையைச் சென்றடைய வேண்டும். எனவே முடிக்கப்பட்ட பொருட்கள் சந்தைக்கு எடுத்துச் செல்லும் வரை பொருத்தமான கிடங்குகளில் சேமித்து வைக்க வேண்டும்.

**6. நிலத்தோற்றம் :**

i. ஒரு தொழிற்சாலையை நிறுவுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் சமமானதாக இருக்க வேண்டும்.

ii. இது பல்வேறு போக்குவரத்து சாதனங்களைப் பயன்படுத்திக் கொள்ள ஏதுவாக இருக்கும்.

**7. காலநிலை:**

ஒரு பகுதியில் நிலவும் காலநிலை, தொழிலகங்களின் அமைவிடத்தை தீர்மானிக்கும் முக்கிய காரணிகளில் ஒன்றாகும்.

**8. நீர்வளம்:**


i. நீர்வளம் தொழிற்சாலைகளின் அமைவிடத்தை நிர்ணயிக்கும் மற்றொரு முக்கியமான காரணியாகும்.

ii. இக்காரணத்தினால் ஆறுகள், கால்வாய்கள் மற்றும் ஏரிகளுக்கு அருகே பல தொழிலகங்கள் நிறுவப்பட்டுள்ளன.

iii. இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலை, ஜவுளி தொழிற்சாலை மற்றும் இரசாயன தொழிற்சாலைகளின் செயல்பாட்டிற்கு ஏராளமாக நீர் தேவைப்படுகிறது.

17) தொழிலகங்களின் வகைப்பாட்டை விளக்கப்படம் மூலம் விளக்குக.

**பதில் :**




18) இந்தியாவில் உள்ள தொழிற்சாலைகள் சீரற்ற பரவலை கொண்டுள்ளன. காரணங்களைக் கண்டறியவும்.

**பதில் :** 1. இந்தியாவில் தொழில்களின் விநியோகம் மிகவும் சீரற்றது.
2. இது தேவையான மூலப்பொருட்கள் மற்றும் மின் வளங்களின் சீரற்ற விநியோகத்தின் காரணமாக ஓரளவு நடைபெறுகிறது.
3. பெரிய நகரங்களில் நிறுவனங்கள், நிதி ஆதாரங்கள் மற்றும் பிற தேவையான நிலைமைகளின் பங்களிப்பு காரணமாக, நல்ல போக்குவரத்து அமைப்பு உள்ள இடங்களில் தொழில்கள் செழித்து வளர்கின்றன.
4. இந்தியாவின் பிராந்திய வளர்ச்சி செயல்திறன் குறிப்பாக சீரற்றதாக உள்ளது.
5. ஜார்கண்ட், ஒரிசா, சத்தீஸ்கர், ராஜஸ்தான், கர்நாடகா மற்றும் தமிழ்நாட்டின் சில பகுதிகள் உலோக தாதுக்களின் இருப்புக்களைக் கொண்டுள்ளன. இவை குறிப்பாக தீபகற்பத்தின் வடகிழக்கு பகுதியில் அமைந்துள்ளன.
6. பருத்தி, சணல், சர்க்கரை உள்ளிட்ட வேளாண் சார்ந்த தொழில்கள் மூலப்பொருட்களை உற்பத்தி செய்யும் பகுதிகளில் அதிக அளவில் குவிந்துள்ளன.
7. கேரளாவின் கரையோரப் பகுதியில் பெருங்குடல், கொப்ரா மற்றும் மீன் சுமக்கும் தொழில்கள் அதிக அளவில் உள்ளன.

19) தொழிலகங்கள் நிறுவுவதற்குத் தேவையான புவியியல் அல்லாத காரணிகள் பற்றி விளக்குக.

**பதில் :** **மூலதனம்:**
(i) தொழிலகங்கள் நிறுவுவதற்கு மூலதனம் அல்லது அதிக முதலீடு தேவைப்படுகிறது. மூலதனம் இல்லாமல் எந்த ஒரு தொழிற்சாலையையும் நிறுவ முடியாது.
**கடன் வசதி:**
(i) பெரும்பாலும் தொழில் முதலீட்டாளர்களுக்கு தொழில் தொடங்க போதுமான நிதி இருக்க வாய்ப்பில்லை.
(ii) தொழிற்சாலை தொடங்கும் பொருட்டு முதலீட்டாளர்கள் கடன் வசதியை நாடுவர். எனவே கடன் மற்றும் காப்பீடு வழங்கும் நிறுவனங்களின் சேவை தேவைப்படுகிறது.
**அரசாங்க கொள்கைகள்:**
(i) பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கும் அதிகமான மாசுபாட்டை கட்டுப்படுத்துவதற்கும் பெருநகரங்களில் மிகுதியான தொழிலகங்களை தவிர்ப்பதற்கும், தொழிற்சாலையை நிறுவுவதற்கும், நிலம் ஒதுக்கீடு செய்வதில் சில கட்டுப்பாடுகளை அரசாங்கம் விதிக்கிறது.
(ii) எனவே அரசாங்கக் கொள்கைகள் மற்றும் விதிமுறைகள் தொழிலகங்களின் அமைவிடத்தை தீர்மானிக்கின்றன.